அமலாக்கத் துறை வழக்கை ரத்து செய்யக் கோரி ஐசரி கணேஷ் தாக்கல் செய்த மனு தள்ளுபடி

சென்னை, ஜூலை 14: அமலாக்கத் துறை பதிவு செய்த வழக்கை ரத்து செய்யக் கோரி ஐசரி கணேஷ் தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

வேல்ஸ் பல்கலைக்கழக நிறுவனரும், திரைப்படத் தயாரிப்பாளருமான ஐசரி கணேஷுக்கு சொந்தமாக, திருவள்ளூரில் உள்ள வேல்ஸ் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி வாங்க முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கருக்குலஞ்சம்கொடுத்ததாக ஊழல் ஒழிப்பு போலீஸார் கடந்த 2023-ஆம் ஆண்டு வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கின் அடிப்படையில் அமலாக்கத் துறை சட்டவிரோத பணப் பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்தது. இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் ஐசரி கணேஷ் மனுத் தாக்கல் செய்தார். அந்த மனுவில், இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த அரசு மருத்துவர் பாலாஜிநாத் தன் மீதான வழக்கை ரத்து செய்யக் கோரி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவுக்கு பதிலளித்த ஊழல் ஒழிப்பு போலீஸார், இந்த வழக்குத் தொடர்பாக எந்த ஆதாரங்களும் இல்லை எனக் கூறி, வழக்கை முடித்துவைத்து ஊழல் ஒழிப்பு ஆணையத்துக்கு அறிக்கை அளித்துள்ளதாகக் கூறியுள்ளார். அவ்வாறு முடித்துவைக்கப்பட்ட வழக்கின் அடிப்படையில் அமலாக்கத் துறை வழக்குப் பதிவு செய்ய முடியாது. எனவே, இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஊழல் ஒழிப்பு போலீஸாரின் அறிக்கையை ஏற்று விசாரணை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த பின்னரே, இந்த மனுவை விசாரிப்பது குறித்து முடிவு செய்யப்படும் எனக் கருத்து தெரிவித்தனர்.

இதையடுத்து மனுவை திரும்பப் பெறுவதாக ஐசரி கணேஷ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், மனுவைத் திரும்பப் பெற அனுமதித்து தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

நாகர்கோவில் சிறையில் கைதி சாவு வழக்கு: கொலை வழக்குப் பதிய உறவினர்கள் வலியுறுத்தல்

3 வார்டர்கள் கைது

கைது செய்யப்பட்ட நாகர்கோவில் சிறை வார்டர்கள்.(உள்படம்) உயிரிழந்த சபரிவர்மன்.

நாகர்கோவில், ஜூலை 14: நாகர்கோவில் கிளை சிறையில் உயிரிழந்த விசாரணை கைதியின் உடலை வாங்க மறுத்த உறவினர்கள், கொலை வழக்குப் பதிவு செய்ய கோரி செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கன்னியாகுமரி மாவட்டம், வடக்கு தாமரைகுளத்தை அடுத்த ஈத்தங்காட்டைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியான சபரிவர்மன் (33), தனது கடையில் புகையிலைப் பொருள்கள் விற்பனை செய்ததாகக் கூறி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

அவர், திங்கள்கிழமை அதிகாலை சிறையில் மயக்கமடைந்ததை அடுத்து, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு போலீஸார் கொண்டு சென்றனர். அங்கு சபரிவர்மனை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

தகவலறிந்ததும் சபரிவர்மனின் மனைவி ஆனந்தவல்லி, உறவினர்கள் சபரிவர்மனின் சாவில் சந்தேகம் இருப்பதாகவும், போலீஸார் தாக்கியதால் அவர் இறந்ததாகவும் கூறி மருத்துவமனை முன் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

மாவட்டக்காவல் கண்காணிப்பாளர் இரா.ஸ்டாலின் அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். சபரிவர்மனின் உடலை பிணவறையில் பார்த்து விட்டு வெளியே வந்த அவரது மனைவி, உறவினர்கள் உடலில் காயங்கள் இருப்பதாக கூறினர்.

இதற்கிடையே, நாகர்கோவில் குற்றவியல் நீதிபதி சத்தியமூர்த்தி சபரிவர்மனின் உறவினர்களிடம் விசாரணை மேற்கொண்டார். சிறை காவலர்களிடமும் விசாரணை நடத்தினார்.

இந்த நிலையில், நாகர்கோவில் மருத்துவர்களுடன் திருநெல்வேலி, தூத்துக்குடியிலிருந்து வரவழைக்கப்பட்ட மருத்துவர்களும் சேர்ந்து சபரிவர்மனின் உடல் கூறாய்வு செய்யப்பட்டது.

உறவினர்கள் கோரிக்கை: பிணவறை முன் சபரிவர்மனின் உறவினர்கள் மட்டுமின்றி ஏராளமான பொதுமக்கள், அரசியல் கட்சியினர் திரண்டிருந்தனர். இதனால், அங்கு கூடுதல் போலீஸார் பாதுகாப்பு பணிக்காக நிறுத்தப்பட்டனர்.

வருவாய்த்துறை அலுவலர்களும் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு வந்தனர். அவர்களிடம் சபரிவர்மனின் மரணத்தை கொலை வழக்காகப் பதிவு செய்ய வேண்டும். சபரிவர்மனின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என அரசியல் கட்சியினர் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அந்தகோரிக்கைகளை நிறைவேற்றும் வரை சபரிவர்மனின் உடலை வாங்க மாட்டோம் என்று கூறி உறவினர்கள் 2-வது நாளாக செவ்வாய்க்கிழமையும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

3 வார்டர்கள் கைது: சபரிவர்மன் உடற்கூறாய்வில் அவரது உடலில் 19 இடங்களில் காயம் இருப்பதும், அவரது கை, கால்களை கட்டிப்போட்டு தாக்கியதற்கான அடையாளம் இருப்பதும் தெரியவந்தது.

இதையடுத்து, நாகர்கோவில் சிறையின் தலைமை வார்டர் ஜெகன், வார்டர்கள் சிவகுமார், திருவிடை நம்பி ஆகிய 3 பேரை நேசமணிநகர் காவல் நிலைய போலீஸார் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்தனர்.

பஞ்சாப் நேஷனல் வங்கி punjab national bank

கடன் மீட்பு நிர்வாக கிளை (ARMB), எண்.448A, டாக்டர் நஞ்சப்பா ரோடு, கோயம்புத்தூர் - 641 018.
போன் : 0422-2231314 / 345, மொபைல் : 9963993409, மின்னஞ்சல் : cs4371@pnb.bank.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 04.08.2026 தேதி அன்று (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)

முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 04.08.2026 தேதி அன்று, மாலை 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் நெருக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள கவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : தெரியவில்லை.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

லாட் எண்.	கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாஸி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான கவாதீனம் எடுத்த தேதி ஈ) கவாதீனத்தின் தன்மை அடையாளம் / கொள்நிலை/ஆக்கபூர்வ கவாதீனம்	1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
1	**கிளை : ஒசூர் (ID 496200) (குற்போது கோயம்புத்தூர் ARMB-க்கு மாற்றப்பட்டுள்ளது)** **திரு.சன்முகம்,** த/பெசந்தானம் **கடன்தாரர் : திரு.சன்முகம்,** த/பெசந்தானம், கதவு எண்.5/630/2, மனை 66, முனிஸ்வர் நகர், மூகண்டபள்ளி, ஒசூர் – 635 109. **சார்-கடன்தாரர்/ அடமானதாரர் : திரு.சந்தானம்,** த/பெசண்முக நமசிவாயம், கதவு எண்.5/630/2, மனை 66, முனிஸ்வர் நகர், மூகண்டபள்ளி, ஒசூர் – 635 109.	**(அட்டவணைச் சொத்து) : *திரு.சந்தானம் பெயரிலுள்ள சொத்து (PAN NO: AKBPC8681D):** கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், ஒசூர் சார் பதிவு மாவட்டம், ஒசூர் தாலூகா, மூகண்டபள்ளி கிராம சர்வே எண்.755/2ல் புதிய உட்பிரிவின் படி சர்வே எண்.755/22ல் உள்ள புன்செய் ஏக்கர் 4.64 தீர்வை ரூ.6.36. இதிலடங்கியதும் அதன் பகுதியுமான மனை எண்.66ன் **அளவுகளாக :** கிழமேல் 33 அடி, தென்வடல் 40 அடி, கொண்ட 1320 சதுர அடி நிலமும், அதில் தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்துடன் கட்டப்பட்டுள்ள RCC தார்சு கூரைவேய்ந்த கட்டிடமும் சேர்ந்த நிலம் மற்றும் கட்டிடச் சொத்து, கதவு எண்.5/630 கொண்டதாகும். இதன் **எல்லைகள் வருமாறு :** கிழக்கு : மனை எண்.67, மேற்கு : மனை எண்.65, வடக்கு : 25 அடி அகல 2வது மெயின் ரோடு, தெற்கு : மனை எண்.71. **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 12.728444, 77.807861** **மேற்படி சொத்து M/S.அல்டிமேட் ஆர்க்கிடெக்ட் பெற்றுள்ள கடனிற்கும் (கணக்கு எண். 496200JH00009141) பிணையமாக நீட்டிக்கப்பட்டுள்ளது. ரூ.20,53,535.75 – 30.06.2026 தேதி வரை. இக்கணக்கு 'வாராக் கடன் கணக்கில்' (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளது.**	அ) 29.10.2021 ஆ) (i) **30.06.2026 தேதி அன்று ரூ.26,87,991.00** மற்றும் **01.07.2026** தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன். (கணக்கு எண்.496200NC00001229) (ii) **30.06.2026 தேதி அன்று ரூ.48,87,949.66** மற்றும் **01.07.2026** தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகளுடன். (கணக்கு எண். 4962009900000599) **ஆகமொத்தத் தொகை : ரூ.75,75,940.66 (ரூபாய் எழுபத்து ஐந்து லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மற்றும் பைசா அறுபத்து ஆறு மட்டும்)** இ) 11.03.2022 ஈ) அடையாளம்	1) **ரூ.69,30,000/-** (ரூபாய் அறுபத்து ஒன்பது லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) 2) **ரூ.6,93,000/-** (ரூபாய் ஆறு லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரம் மட்டும்) 3) **ரூ.50,000/-** (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் : 04.08.2026 (செவ்வாய்க்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**

மின்-ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்

இவ்விற்பனையானது பிணைய நலன் (நமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **04.08.2026 (செவ்வாய்க்கிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.
https://baanknet.com & www.pnbindia.in

தேதி : 13.07.2026
இடம் : கோயம்புத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாஸிச்சட்டம் 2002ன் கீழ் விதி 9(1)-ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு

ரூ. 7-ஐ நோக்கிச் செல்லும் முட்டை விலை: இப்போது ரூ. 6.75



நாமக்கல், ஜூலை 14: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மேலும் 5 காசுகள் உயர்ந்து ரூ. 6.75-ஆக நிர்ணயம் செய்யப்பட்டது.

தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் நாமக்கல் மண்டல ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், கோழிப் பண்ணையாளர்களிடம் முட்டை விலையில் மாற்றம் செய்வது தொடர்பாக கருத்து கேட்கப்பட்டது. அப்போது, முட்டை உற்பத்திக்கான மூலப்பொருள்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதாலும், வாகனங்களுக்கான வாடகை கட்டணம் உயர்வு, மற்ற மண்டலங்களில் விலை உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு விலையில் மாற்றம் செய்யலாம் என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, முட்டையின் பண்ணைக் கொள் முதல் விலை மேலும் 5 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ. 6.75-ஆக தேசிய ஒருங்கிணைப்புக் குழுவால் அறிவிக்கப்பட்டது. பல்லடத்தில் நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கறிக்கோழி விலை ரூ. 151-ஆகவும், முட்டைக் கோழி ரூ. 120-ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

வீரவநல்லூர் இரட்டை கொலை வழக்கு: இருவர் சரண்

சேரன்மகாதேவி, ஜூலை 14: திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் அருகே தந்தை, மகன் கொலை செய்யப்பட்ட வழக்கில் முக்கிய குற்றவாளி இருவர் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை சரணடைந்தனர்.

கல்லிடைக்குறிச்சி அருகே உள்ள மூலச்சி கிராமம், வடக்குத் தெருவைச் சேர்ந்தவர் பெருமாள் பாண்டியன். இதே பகுதியைச் சேர்ந்தவர் சித்திரபுத்திரன். இரு குடும்பத்தினரிடையே ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக பெருமாள் பாண்டியன், சித்திரபுத்திரன் மகன் சுப்பிரமணியன் உள்பட இரு தரப்பிலும் மொத்தம் 9 பேர் அடுத்தடுத்து கொலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், சித்திரபுத்திரனின் மற்றொரு மகனான விவசாயி காளிமுத்து (40), அவரது மகன் ஜெயராஜ் (5) ஆகியோரை ஜூலை 2-ஆம் தேதி பெருமாள் பாண்டியன் மகன்கள் உள்ளிட்டோர் கொலை செய்தனர்.

இந்த இரட்டை கொலை வழக்கில் தொடர்புடைய பெருமாள் பாண்டியன் தரப்பினரான மகேஷ் என்ற மாடசாமி, அவரது மனைவி விஜயா, 17 வயது மகன் உள்பட 13 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் சில நாள்களுக்கு முன்பு மூலச்சி, கீழத்தெருவைச் சேர்ந்த கிருஷ்ணன் என்ற அஜித் (25) என்பவரை போலீஸார் சுட்டுப் பிடித்தனர்.

இதனிடையே, இந்த வழக்கில் தொடர்புடைய பெருமாள் பாண்டியனின் மகன் அருள் (25), இதே பகுதியைச் சேர்ந்த வெள்ளப்பாண்டி மகன் தங்கத்துரை (29) ஆகிய இருவரும் செவ்வாய்க்கிழமை சேரன்மகாதேவி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்தனர்.

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா सेन्ट्रल बैंक ऑफ इंडिया Central Bank of India

CENTRAL TO YOU SINCE 1911

மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு (E-Auction Notice) (SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் **2002**, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் கவாதீனம் எடுத்திருந்தார். இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : ஒசூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.சுபா கார்மென்ட்ஸ், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திரு.M.M.கோபி, பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : 50/8A1, லக் இந்தியா எதிரில், ராய்கோட்டை சாலை, ஒசூர். **தற்போதைய யூனிட் முகவரி :** 136/1, முதல் தளம், எண்.4, சாந்தி நகர் கிழக்கு, இன்னர் ரிங் சாலை, ஒசூர் - 635109. **உரிமையாளர் திரு.M.M.கோபி, த/பெ.M.K.மாதைய்யா செட்டி அவர்களின் குடியிருப்பு முகவரி :** கதவு எண். 3/157B, மாட்லாம்பட்டி கிராமம், பைசுஹள்ளி மஜரா, காரிமங்கலம் தாலுக்கா, தர்மபுரி மாவட்டம், தமிழ்நாடு - 635111. **உத்தரவாதம் அளித்தவர் : திரு.M.M.ராஜா, த/பெ.M.K.மாதைய்யா செட்டி,** கதவு எண். 3/142, மாட்லாம்பட்டி கிராமம், பைசுஹள்ளி மஜரா, காரிமங்கலம் தாலுக்கா, தர்மபுரி மாவட்டம், தமிழ்நாடு. **கடன் நிலுவைத் தொகை : 13.07.2026 வரையில் ரூ.2,43,90,818.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 06.07.2022. சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 16.09.2025. சொத்து விபரம் : சர்வே எண்.336 :** பைசுஹள்ளி கிராமம், காரிமங்கலம் தாலுக்கா, தர்மபுரி ஜாயிண்ட் 2 சார்பதிவு மாவட்டம், தர்மபுரி, புதிய விஸ்தீரணம் ஹெக்டேர் 2.61.0 மதிப்பீடு ரூ. 7.25 np (ஏக்கர் 6.45 சென்ட்) இதில் **தாக்கு எண்.1 :** ஏக்கர் 0.58.50 சென்ட் (அல்லது) 25506 சதுரடி விஸ்தீரணம். எல்லைகள் : கிழக்கு : MM கோபி அவர்களின் நிலம், மேற்கு : 30 அடி சாலை, வடக்கு : சென்ன கிருஷ்ணன் மற்றும் சுபாஷினி ஆகியோருக்கு சொந்தமான சர்வே எண்.329, தெற்கு : MM கோபி அவர்களின் நிலம். **தாக்கு எண்.2 :** ஹெக்டேர் 0.58.50 சென்ட் அல்லது 25506 சதுரடி விஸ்தீரணம். எல்லைகள் : கிழக்கு : MM கோபி அவர்களின் நிலம், மேற்கு : 30 அடி சாலை, வடக்கு : MM கோபி அவர்களின் நிலம், தெற்கு : MM மகேந்திரன் அவர்களின் நிலம். **சர்வே எண். 114/1 :** பூமாண்டஹள்ளி கிராமம், காரிமங்கலம் தாலுக்கா, தர்மபுரி ஜாயிண்ட் 2 சார்பதிவு மாவட்டம் மற்றும் தர்மபுரி பதிவு மாவட்டம், மேலும் பூமாண்டஹள்ளி கிராம பஞ்சாயத்து மற்றும் காரிமங்கலம் ஒன்றிய கவுன்சிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. **அயிட்டம் எண். 1 :** புஞ்சை விஸ்தீரணம் ஹெக்டேர் 0.20.00 மதிப்பீடு ரூ.0.12 np (ஏக்கர் 0.49 சென்ட்). **சர்வே எண். 114/2 : அயிட்டம் எண். 2:** புஞ்சை விஸ்தீரணம் ஹெக்டேர் 0.62.0 மதிப்பீடு ரூ.0.38 np (ஏக்கர் 1.53 சென்ட்) அயிட்டம் எண் 1 மற்றும் 2 சேர்ந்து மொத்த பரப்பளவு ஏக்கர் 2.02 சென்ட் இதில் ஏக்கர் 0.50 சென்ட் அல்லது 2024 சதுர மீட்டர் அல்லது ஹெக்டேர் 0.20.24 விஸ்தீரணம். எல்லைகள் : கிழக்கு : சிலம்பரசன் அவர்களின் நிலம், மேற்கு : பூங்காவனம் மற்றும் ஏனையோருக்கு சொந்தமான நிலம் மற்றும் கேசவன் அவர்களின் நிலம், வடக்கு : பஞ்சாயத்து தார் சாலை, தெற்கு : அர்ஜுனன் அவர்களின் நிலம். **இந்த சொத்து திரு.M.M.கோபி, த/பெ.M.K.மாதைய்யா செட்டி அவர்களுக்கு சொந்தமானதாகும்: காப்பு விலை : ரூ.66,55,000.00/-. முன்வைப்புத் தொகை : ரூ.6,65,500/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. . ஏலம் நடைபெறும் தேதி : 31.07.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 27.07.2026 முதல் 29.07.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 31.07.2026 மதியம் 1.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர் கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **31.07.2026,** மதியம் **1.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக https://baanknet.com என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

தேதி : 13.07.2026
இடம் : ஒசூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

உளுந்தூர்பேட்டை தமிழ் எழுச்சி மாநாடு திருப்புமுனையை ஏற்படுத்தும்: திருமாவளவன்

சிதம்பரத்தில் நடைபெற்ற மண்டல விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் பேசிய கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன்.

கடலூர், ஜூலை 14: உளுந்தூர்பேட்டை தமிழ் எழுச்சி மாநாடு அரசியலில் திருப்புமுனையை ஏற்படுத்தும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்தார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் ஆகஸ்ட் மாதம் உளுந்தூர்பேட்டையில் நடைபெற உள்ள தமிழ் எழுச்சி மாநாட்டை முன்னிட்டு, சிதம்பரத்தில் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம் உள்ளிட்ட ஆறு மாவட்டங்களை ஒருங்கிணைத்த மண்டல செயற்குழு கூட்டம் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்றது.

கூட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. கலந்து கொண்டுபேசியதாவது:தேர்தலுக்கு முன்பாகபல் வேறு அரசியல் கட்சிகள் தங்களது பலத்தை நிரூபிக்கவும், க